இதழ்-58

01.04.2023

பல்சுவை மின்னிதழ்



# பெருவெள்ளத்திற்கான பயணம்

# நீர் இன்றி அமையாது உலகு..!

ஆசிரியர் பதிவு

நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்டு, ஆறுகள், மலைகள், குளங்கள், நிலத்தடி நீர் என இயற்கையின் அரவணைப்பில் இருந்த இலங்கையிலும் இப்போது தண்ணீருக்கான தகராறுகள் தலை தூக்கி வருகின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இந்து மாமன்றத்தால் நடைபெற்ற அமரர். கந்தையா நீலகண்டன் அவர்களின் நினைவுப் பேருரையில் பொறியியலாளர் ச.சர்வராஜா கலந்து கொண்டு யாழ்ப்பாண நீர் எதிர்கொண்டுள்ள ஆபத்துக்களையும் எமக்கான வாய்ப்புக்களையும் பற்றிய ஆழமான அதேநேரம் தெளிவான உரை ஒன்றை ஆற்றினார்.

நிலத்தடி நீர் வளத்தை நம்பிய யாழ்ப்பாணத்தின் நீர் நுகர்ச்சியில் மழை நீர் வீண் விரயமாவது மன்னிக்க முடியாத குற்றம் என்பதை குறிப்பிட்ட பொறியியலாளர் காணாமல் போயுள்ள யாழ்ப்பாண குளங்களை மீள அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டார். சனத்தொகை அதிகரித்து வரும் சூழலில் எதிர்காலங்களில் நீருக்கான கேள்வி இன்னும் பன்மடங்காகும் எனக்குறிப்பிட்டவர் கடலோடு நாம் கலக்கவிடும் மழைநீரை சேமிக்கும் வழிகளை நாம் அமுல்ப்படுத்தினால் அதன் மூலமே எமது நீர்த்தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்வதோடு, எஞ்சும் நீரை ஏற்றுமதியும் செய்யலாம் எனக் குறிப்பிட்டார்.

கைகளில் மழை நீரான வெண்ணெய் இருக்கிறது. நாங்கள் போத்தல் தண்ணீருக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். நீர் வளமேயில்லாத நாடுகளான அரபு நாடுகளும், சிங்கப்பூர் போன்ற நாடுகளும் கூட அடுத்த ஐம்பது வருடத்திற்கான நீர்த் தேவைக்கான திட்டங்களோடு இருக்கும் போது, எல்லா வளமும் இருந்தும் எந்தவித திட்டத்தோடும் நாங்கள் இல்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

அரசு செய்ய வேண்டிய பல வேலைகளை இப்போது நாட்டில் தொண்டு நிறுவனங்களும், தனியார் அமைப்புக்களும் தான் செய்து கொண்டிருக்கின்றன. எனவே மழை நீரை கடலோடு கலக்க விடாமல் சேமிக்கும் திட்டங்கள் பற்றிய உரையாடல்கள் அதிகமாக நடக்க வேண்டும். மாரி காலத்திற்கு முன்பே குளங்கள் தூர்வாரப்பட வேண்டும். தேவையான இடங்களில் புதிய குளங்களுக்கான முன்மொழிவுகளும் துறைசார் வல்லுநர்களினால் பரிந்துரைக்கப்பட வேண்டும். பல்வேறு தளங்களில் இயங்கும் அமைப்புக்கள் எல்லாம் ஒரே குடையின் கீழ் இத்திட்டத்திற்காக உழைக்க முன்வர வேண்டும் என்பதேயே தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களோடு தூமி கேட்டுக்கொள்கிறது.

*நீர் இன்றி அமையாது நீர்..*

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநிதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 ஆடல் கலையே தேவன் தந்தது
08 யோகர் சுவாமிகள் குருபூஜை
09 நெல்லைக் காய வைக்க தளம் வேண்டும்
13 மட்டக்களப்பில் தமிழிற்கு ஓர் அரண்மனை
16 பரியாரியார் Vs அய்யர்
19 விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்
22 ஆய்வு அரசர்கள் - பரிசளிப்பு விழா
23 உலகமயமாக்கலில் கொவிட்-19இன் தாக்கம்
30 இலங்கையில் இணையக்கல்வி
34 அளவெட்டியிலும் ஹவாயிலும் ஒரே நேரத்தில் கும்பாபிஷேகம்
36 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்
38 ஐபிஎல் 2023ற்கான புதிய விதிகள்

தவிரக்க முடியாத காரணத்தால் சித்திராங்கதா தொடர் இம்முறை இடம்பெறாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம்.



# ஆடல் கலையே தேவன் தந்தது..

மேலே ஆகாசமும் கீழே மண்ணும் எல்லையாக இருக்க காண்பவை எல்லாவற்றிலும் சந்தத்திற்கேற்ற ஒரு அசைவை அதாவது நடனத்தை உங்களால் உணர முடிகிறதா? மேகத் திரையைக் கிளித்து, பாய்ந்து பாய்ந்து பளிச்சிடும் மின்னலின் நடனம் தெரிகிறதா? மேகத் தாளத்திற்கு உருகி விண்ணிலிருந்து நீர்த்துமிகள் மண்ணுக்கு வரும் நர்த்தனத்தின் அழகிற்கு இணை ஏது? வந்த நீர்த்திவலைகள் பாறைகளில் பட்டு தெறித்தாடுவதையும், வளைந்து நெளிந்து ஓடி ஓடி ஆடி, மேடு பள்ளங்களில் ஜதி மிதித்து, கடலோடு சத்தமிட்டு சங்கமிக்கும் வனப்பையும் வார்த்தைகளில் வடிக்கலாமோ?

காற்றுப் பாட்டிற்கு தாண்டவம் ஆடும் அந்த மரத்தைப் பாருங்கள். நடன முத்திரை காட்டும் அதன் இலைகளைப் பாருங்கள். "லப் டப்" என்று எம் இதயமும் நாடிகளும் துடித்து துடித்து ஆடுவதாலும், குருதி ஓடுவதாலும் தான் இந்த உலகத்தில் உயிர் வாழ்க்கையே நடக்கிறது. இயற்கை மட்டுமல்ல, இயந்திரங்களிலும் அசைவுதான் அடிப்படை. இயந்திரப் பாகங்கள் அசைந்து ஆடாமல் எந்தப்பெரிய இயந்திரமும் தொழிற்படாது. எல்லாவற்றுக்கும் அடிப்படையான அணுவைச் சுற்றிக்கூட இலத்திரன்கள் நீள் வட்டப் பாதையில் நாட்டியம் ஆடுவதாகவே விஞ்ஞானமும் சொல்கிறது. எனவே உலக இயக்கமே நடனத்தினால்த்தான் நடக்கிறது.

"உலக வாழ்க்கை நடனம் நீ ஒப்புக்கொண்ட பயணம்
அது முடியும்போது தொடங்கும் நீ தொடங்கும் போது முடியும்.
மனிதன் தினமும் அலையில் அலையும் குமிழி
தெரியும் தெரிந்தும் மனமே கலங்காதிரு நீ
தாளம் இங்கு தப்பவில்லை யார் மீதும் தப்பு இல்லை
கால்கள் போன பாதை எந்தன் எல்லை"



உயிர்கள் யாவற்றுக்கும் இன்பம் வந்தால் துள்ளிக் குதிக்கின்றன. துன்பம் வந்தாலும் சோக நடனமாடுகின்றன. விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், கசப்பு களிப்பு என எமது எந்த உணர்வையும் எமது முகபாவத்தாலோ, கையசைவாலோ, உடல் மொழியாலோ வெளிக்காட்டி விடுகிறோம். பேச்சுக்கு முதல் வரும் முகச்சுளிப்புகளும், இழிப்புகளுமே எங்கள் உணர்வுகளை கடத்த போதுமாய் இருக்கின்றன.

“வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக்கிளர் அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுது ஆட
நாதம் கொண்டு ஆடினான்
ஞானானந்தக் கூத்தே”

என்கிறார் திருமந்திரத்தில் திருமூலர். அசைவற்றுக்கிடந்த உலகமும் உயிர்களும் கூத்தனின் திருநடனம் கண்டு ஆடத்தொடங்கியதாம். அதாவது இயங்கத்தொடங்கியதாக சொல்கிறார். ஆம்! உலக



இயக்கமே நடனத்தின் அடிப்படையானது என்பதை விஞ்ஞானம் ஒத்துக்கொள்ளப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆன்மீகம் சொல்லியிருக்கிறது. உலகத்தின் மையமாக தில்லைப் பெரிய கோயிலைக்கருதி, மையத்தில் நின்று ஆடும் நடன சபாபதியாக ஆடல்வல்லான் என்கிற அழகு தமிழ்ப்பெயரோடு இறைப் பரம்பொருளை ஆன்மீகம் பல இடங்களில் சொல்லியிருக்கிறது.

“இனித்தமுடன் எடுத்த பொற்பாதம்
காணப்பெற்றால் மனித்த பிறவியும்
வேண்டுவதே இம்மாநிலத்தே”

என அப்பர் பெருமான் அந்த தூக்கிய திருவடியின் அழகை காணும் பேறை வியக்கிறார். சாதாரண நாட்டியமா அவன் ஆடுவது! பூமியின் இயக்கமல்லவா அவன் நடனம்.

“அசையும் பொருளில் இசையும் நானே
ஆடும் கலையின் நாயகன் நானே
எதிலும் இயங்கும் இயக்கமும் நானே
என் இசை நின்றால் அடங்கும் உலகே....”

இதுவரை இந்த கட்டுரை சொன்னதை ஒற்றை வரியில் கவியரசர் கண்ணதாசன் சொல்லிவிட்டார். எதிலும் இயங்கும் இயக்கம் இறைவன் தான் என்று வரிகளில் நிறுவியவருக்காக திருவிளையாடல் படத்தில் சிவபெருமான் அசையாமல் நின்றதும் உலகமே ஸ்தம்பித்து நிற்பதாக ஒரு காட்சியை காட்டுவார்கள். பிரபஞ்ச இரகசியமே அங்கே காட்டப்பட்டு விட்டது.

அசைவுகளும் அதிர்வுகளும் நிறைந்த நடனம் இல்லாமல் உலக இயக்கம் இல்லை. அதை ஆன்மீகம் சிவ தாண்டவம் என்கிறது. விஞ்ஞானம் ஜீவ நடனம் (bio dance) என்கிறது.

“நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே.”

என்று கண்ணதாசன் எழுதவும் சிவாஜி அசையவும் உலகம் மீள இயங்குவாதாக காட்டுவார்கள்.

படைப்பை ஒரு நாட்டியமாக கருதியமையாலேயே இறைமையை ஒரு நடன சபாபதி என்று நாம் கூறினோம். அவன் ஒரு நாட்டியக்காரன் இல்லையென்றால், இந்த நாட்டியத்தை எப்படி அவனால் நிகழச் செய்ய முடியும்? சிவனை நடராஜன் என்று நாம் கூறும்போது, ஒரு தனிமனிதர் நடனமாடிக் கொண்டிருப்பதாக நாம் சொல்வது கிடையாது. நடராஜனின் சித்தரிப்பில், அவரைச் சுற்றிலும் ஒரு வட்டம் இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். எப்போதுமே வட்டம் என்பது பிரபஞ்சத்தின் குறியீடாக இருக்கிறது. ஏனென்றால் எந்த ஒன்று நகரும்போதும், படைப்பில் நிகழும் வெகு இயல்பான வடிவம் ஒரு வட்டமாகவே உள்ளது. தானாகவே நிகழும் எதுவும் ஒரு வட்டம் அல்லது ஒரு நீள் வட்டம் (ellipsoid) – சற்றே மாறுபட்ட ஒரு வட்டம் – ஏனென்றால் ஒரு வட்டம் என்பது குறைந்தபட்ச எதிர்விசை கொண்ட வடிவம். அதனாலேயே நடராஜ மூர்த்தம் வட்ட வடிவத்திற்குள் அமைக்கப்பெற்று இருக்கிறது.

ஜெனீவா அருகே சுவிட்சர்லாந்து - பிரான்ஸ் எல்லையில் அமைந்துள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் (CERN) உலகின் மிகப்பெரிய மற்றும் நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை மிகவும் நுட்பமான அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆய்வு செய்கிறது. நடராஜர் சிலை ஒன்று 2004ஆம் ஆண்டு ஜூன் 18 அன்று அங்கு நிறுவப்பட்டது. “சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்தத் தாண்டவம் என்ற கோலம் “காஸ்மிக் டான்ஸ்” என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. அணுவின் அசைவும் நடராஜரின் நடனமும் ஒன்றாக கருதபடுகிறது. ஒட்டு மொத்த அண்டத்தின் குறியீடாக நடராஜர் அமைந்துள்ளார்,” என்பதை குறிப்பிடவே சுவிட்சர்லாந்தின் ஐரோப்பிய ஆராய்ச்சி கூடத்தில் நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது.

சிவனின் ஆனந்த தாண்டவமாக கருதப்படும் நடராஜ வடிவம் போல மொத்தமாக நூற்றியெட்டு தாண்டவ வடிவங்கள் இந்து சமயத்தில் உள்ளது. நடன கலையின் தலைவனாக இருந்து



பரத முனிவருக்கு பரதநாட்டியம் கற்பித்த சிவபெருமான், ஆனந்த தாண்டவத்திற்கும், பிரளய தாண்டவத்திற்கும் இடையே இந்த நூற்றியெட்டு தாண்டவங்களை ஆடுகிறார். சிவபெருமான் பரதநாட்டியத்தின் கரணங்களான 108 கரணங்களையும் ஆடியதாக கூறப்படுகிறது. ஆணின் நடனம் தாண்டவம் என்று பெயர் பெறுவதால், இந்தக் கரண நடனங்கள் நூற்றியெட்டு தாண்டவங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

“கூத்தும் இசையும்
கூத்தின் முறையும்
காட்டும் என்னிடம்
கதை சொல்ல வந்தாயோ
பாட்டும் நானே பாவமும் நானே”




தில்லைக் கூத்தன் என்று போற்றப்படும் இறைவனின் இந்த நூற்றியெட்டு தாண்டவ வடிவங்கள் பற்றிய தேடல் மிகக் கனதியானது. ஆடல்வல்லானாகிய நடராஜப் பெருமானின் தாண்டவங்களில் 46 ஆவது கரணமான ,**‘விருச்சிகரேசிதம்’** என்னும் கரணத்தின் அற்புத கலைவடிவத்தின் சிலை வடிவத்தையே அட்டையில் காண்கிறீர்கள். காலைத் தேள் போல வைத்து இரு கைகளையும் ஸ்வஸ்திகமாக அமைத்து, இருமருங்கும் நீட்டி நின்று ஆடுவது விருச்சிகரேசிதமாகும். தமிழரின் பாரம்பரியங்களை எடுத்தியம்பும் சிவபூமி யாழ்ப்பாண அரும் பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள சிலையே இது.

மேலைத்தேசத்தவரும் கண்டு வியக்கும் கலை சார்ந்த எமது விஞ்ஞான அறிவியலைப் பற்றிய எமது தேடல் அதிகமாக்கப்பட வேண்டும். பொக்கிஷங்களாக நிறைய புதைந்தே இருக்கின்றன. அவற்றை வெளிக்கொணர வேண்டியது எம் ஒவ்வொருவரதும் தார்மீக கடமை.

**‘ஆடல் கலையே
தேவன் தந்தது
தேவனின் ஆடலில்தான்
ஜீவன் வந்தது...’**



# யோகர் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணத்து சித்தர்களில் மிக முக்கியமானவரான யோகர் சுவாமிகள் நினைவு தினம் 01.04.2023 அனுஷ்டிக்கப்படுகிறது.

“ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தெய்வம்” - என்று சொன்ன யோகர் சுவாமிகளின் நல்லைக் கந்தன் பற்றிய பாடல் ஒன்றை பகிர்ந்து அவரை வணங்குகிறது துமி!

“நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே!
இரவுபகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி

நான்மறந்து போவேனோடி -
கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்


காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டலென்ன
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.”

ஒரு பொல்லாப்புமில்லை





முழுதும் உண்மை

எப்பவோ முடிந்த காரியம்

நாமறியோம்

J. சிவச்சித்ரா



# நெல்லைக் காய வைக்க தளம் வேண்டும்...!

## முன்னேறத் துடிக்கும் பம்பைமடுக் கிராமம்

பம்பைமடு (218A) எனும் பிரதேசமானது வவுனியா மாவட்டத்திலேயே விவசாயத்தில் அதிக அளவு விளைச்சலை பெற்றுக்கொள்ளும் கிராமமாகும் இங்கு மொத்தம் 120 குடும்பங்கள் விவசாயத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் இங்கு விவசாயத்திற்கு தேவையான நீர் வளமாக எட்டு நன்னீர் குளங்களை கொண்டு காணப்படுகின்றது.

•கல் வலி கூலாங்குளம் - 40 ஏக்கர் பெரும்போகம் 20 ஏக்கர் சிறு போகம்.
•வைகாளி கூலங்குளம் - 103 ஏக்கர் பெரும்போகம் 25 ஏக்கர் சிறு போகம்.
•வள்ளிபுரம் - 35 ஏக்கர் பெறும் போகம் 15 ஏக்கர் சிறுபோகம்.
•கலியன் சாய்ந்த குளம் - 50 ஏக்கர் பெரும்போகம் 10 ஏக்கர் சிறுபோகம்.
•பெருக்கு குளம் - 70 ஏக்கர் பெரும்போகம் 10 ஏக்கர் சிறு போகம்
•பெரிய கட்டுக்குளம் - 227 ஏக்கர் பெரும்போகம் 60 ஏக்கர் சிறு போகம்.
•புண்ணியன் குளம் - 12 ஏக்கர் பெரும்போகம்.
•சின்ன குளம் - 12 ஏக்கர் பெரும்போகம்.

என எட்டு குளங்களை அடிப்படையாகக் கொண்டு பெரும்போகம் மற்றும் சிறுபோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பம்பை மடு பகுதியானது சிறந்த நீர் வளத்தையும் நிலவளத்தையும் கொண்டுள்ளது. இங்கு நிலவளமாக இருவாட்டி மண் காணப்படுவதால் இங்குள்ள மக்கள் அதிகளவில் விவசாயம் செய்கின்றார்கள். விவசாயமாக நெற்பயிர்ச் செய்கை (சிறுபோகம், பொரும் போகம்) நிரந்தர பயிர்செய்கை (வாழை, தென்னை, பழமரங்கள்), தானிய வகைகள் (பயறு, உழுந்து, கௌப்பி) செய்கின்றனர்கள். இவ் விவசாயத்துக்கு நீர்வளமாக காணப்படுகின்ற குளத்திலிருந்து நீரை வாய்க்கால்களினூடாக பெற்றுகொள்கின்றனர்கள். இங்கு குளமிருக்கும் காரணத்தால் நீர்மட்டம்

மேலே காணப்படுகின்றது. மக்கள் தமது அன்றாட தேவைக்கான நீரை கிணற்றிலிருந்து பெற்றுக் கொள்கின்றனர்கள்.

இங்கு வருட சராசரி மழை வீழ்ச்சி 6700 மி.மீ ற்கு குறைவாகவும் வருட சராசரி வெப்பநிலை 32 செல்சியஸ் காணப்படுவதாலும் மழை வீழ்ச்சியின் பெரும்பகுதி ஐப்பசி பிற்பகுதியிலிருந்து தை மாதம் வரை கிடைக்கின்றதாலும் அத்துடன் தரை அமைப்பானது மேடு பள்ளம் போன்று காணப்படுவதாலும் வாய்க்கால்களினூடான நீரோட்டமும் இயற்கையான மரங்களின் செழிப்பான வளர்ச்சியினாலும் மக்கள் வாழ்வதற்கான சிறப்பான சூழல் காணப்படுகின்றது. மக்கள் தமது அன்றாட தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கடைகள், வங்கி, பாடசாலைகள், அரச திணைக்களங்கள், வவுனியா பல்கலைக்கழகம் என்பன காணப்படுகின்றன.

### அடையாளம் காணப்பட்ட முக்கிய தேவைகள், பிரச்சனைகள்

பம்பைமடு பிரதேசத்தில் பாரிய சவாலாக காணப்படும் பிரச்சனையாக நெல்லை காய வைப்பதற்கு நெல் தளம் இன்மையாகும். பாரிய நெல் விளைச்சலைப் பெறும் இப்பிரதேசத்தில் நெல்லினை உலர வைப்பதற்கு தளம் அவசியமாக காணப்படுகின்றது.

சந்தைப்படுத்தல் மற்றும் சுய தொழில் முனைவு என்பன முரண்பாடான நிலையில் காணப்படுகின்றன. நெல் காயவிடும் தளம் இல்லாமையால் விவசாயிகள் நெல்லினை உடனடியாக ஏற்றுமதி செய்வதன் மூலம் நெல்சார் ஏனைய தொழில்கள் இங்கு பாதிப்புக்கு உள்ளாகின்றது பெண் தலைமைத்துவ குடும்பங்கள் நெல்சார் உற்பத்தினை அடிப்படையாகக் கொண்டே தமது ஜீவனோ பாயத்தை மேற்கொண்டு வருகின்றனர் சந்தைப்படுத்தல் மற்றும் சுய தொழில் ஊக்குவிப்பினை வழங்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர்.

பம்பைமடு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் போதிய அளவு வருமானமின்மையினால் வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்றனர் அதனால் மாணவர்கள் பாடசாலை இடை விலகல் ஏற்படுகின்றது.

பம்பைமடு பிரதேசத்தில் காணப்படுகின்ற குளங்கள் தூர்வாரி புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. நீர்வளம் மிக்க பிரதேசமானது எட்டு குளங்களை அடிப்படையாகக் கொண்டு விவசாய செய்கையில் ஈடுபட்டு



வருகின்றது. இங்கு காணப்படுகின்ற குளங்கள் பல மாதங்களுக்கு பிறகு தூர்வாரல் சேர்ப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குளங்கள் தூர்வாரப்பட வேண்டிய கட்டாயம் இங்கு உள்ளது.

குளங்களிலிருந்து வயல் நிலங்களுக்கு நீரை பெற்றுக் கொள்ளுகின்ற வாய்க்கால்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. 50 வருடங்களுக்கு முன்னர் போடப்பட்ட வாய்க்கால்களே இங்கு காணப்படுகின்றன. வயல் நிலங்களுக்கு குளங்களிலிருந்து நீரினை பெற்று தரும் வாய்க்கால்கள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனை புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய கட்டாயம் இங்கு காணப்படுகின்றது.

பம்பை மடுக்குளம் பெரிய கட்டு குளம் கூலாங்குளம் போன்ற குளங்கள் பம்பை மடு பிரதேசத்தில் அதிகளவு நீர் கொள்ளளவை கொண்டு காணப்படுகின்றது. இக்குளங்கள் ஆழப் படுத்த வேண்டிய நிலையில் உள்ளன.



வயல் நிலங்களுக்குள் காட்டு யானைகள் உட்புகுந்து விளை நிலங்களை பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. மக்களினுடைய விளைச்சலை பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் காட்டு விலங்குகள் வயல் நிலங்களுக்குள் உட்புகுந்து அவற்றினை சேதப்படுத்துகின்றன. இவ்வாறு சேதப்படுத்தப்படுகின்ற வயல் நிலங்களை அடையாளம் கண்டு அவற்றிற்கு உரிய மின்சார வேலிகளை அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்

வவுனியா மாவட்டத்தில் முக்கிய நிறுவனமாக வவுனியா பல்கலைக்கழகம் அமைவு பெற்றுள்ள பிரதேசமாக இப்பிரதேசம் காணப்படுகின்றது. எனவே முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரதேசத்தில் அங்கு வாழும் விவசாயிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் அடையாளப் படுத்தப்பட்ட பிரதேசத்தில் பாரிய சவாலாக காணப்படும் பிரச்சனையாக நெல்லை காய வைப்பதற்கு நெல் தளம் இன்மையாகும். பாரிய நெல் விளைச்சலைப் பெறும் இப்பிரதேசத்தில் நெல்லினை உலர வைப்பதற்கு தளம் அவசியமாக காணப்படுகின்றது. விவசாயிகள் நெல்லினை அறுவடை செய்த பிற்பாடு நெல்லினை பச்சையாக ஏற்றுமதி செய்கின்றனர். இதன்மூலம் பொருளாதார ரீதியில் நட்டம் ஏற்படுகின்றது. அதே நேரம் நெல் தளம் காணப்படும் போது

மக்கள் நெல்லினை உலர வைத்து பயன்படுத்துவதோடு அதிகளவு இலாபத்தினையும் பெறமுடியும்.அதே நேரம் நெல்சார் சுயதொழிலை மேற்கொண்டு தமது வாழ்வாதார நடவடிக்கை மூலம் வரும் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும். நெற்தளம் ஆனது 50-70 வருடங்கள் வரை நிலையானதாகவும். அதே நேரம் கிடைக்கப்பெறும் வளத்தினை நீண்ட கால பாவனைக்கு மக்கள் முறையாக பயன்படுத்துவதுடன் இதன்மூலம் அனைத்து மக்களும் பயன் பெறக்கூடியதாகவும் இருக்கும். நெல் தளத்தினை அமைப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களாக...

* 2024 ஆம் ஆண்டளவில் பம்பைமடு கிராமத்தின் வறுமையை 70மூ மாகக் குறைத்தல்.

* பம்பைமடுக் கிராமத்தின் விவசாய விளைச்சலின் விற்பனை விலையை அதிகரித்து வருமான விரயத்தினை 80மூ மாகக் குறைத்தல்.

* விவசாய குடும்பங்கள் வருமானத்தைக் கொண்டு நல் வாழ்க்கையை வாழக்கூடிய நிலை காணப்படும்.



* வறுமை காரணமாக பாடசாலை இடை விலகல் காணப்படும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் வறுமை நிலையிலிருந்து வெளிக் கொண்டு வந்து கல்வியில் முன்னேற்றம் அடைய முடியும்.

பம்பைமடு பிரதேச மக்களினது நீண்ட கால வேண்டுகோளாக தங்களது பிரதேசத்தில் நெல்லிணை உலர வைப்பதற்கு ஒரு தளத்தினை அமைத்து தருமாறு கேட்கப்பட்டிருந்த போதும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஆறு வருடங்களுக்கு முன்னால் அமைக்கப்பட்ட சிறு நெற்களத்தின் மூலம் அங்கு வாழுகின்ற மக்கள் தவணை முறையில் நெல்லினை உலர்த்தி வருகின்றனர். இருப்பினும் அந்த தளமானது மக்களின் தேவையை முற்றுமுழுதாக பூர்த்தி செய்வதற்கு போதாமையாக உள்ளது. அங்கு வாழும் மக்கள் நெல்லைக் காய வைப்பதற்காக நீண்ட தூரம் சென்று உலர்த்த வேண்டிய தேவை உள்ளது. அல்லது நெல்லினை பச்சையாக சந்தை படுத்த வேண்டிய நிலைக்கே தள்ளப்படுகின்றனர். எனவே இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. எனவே அதிகாரிகள் இதனை கவனத்தில் கொண்டு அந்த மக்களினுடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பதன் மூலம் அவர்களினுடைய வாழ்வாதார நடவடிக்கைகள் மாற்றமடைவதோடு வறுமை குறைந்து பாடசாலை இடைவிலகல் குறைக்கப்படும்.



ச. சந்தோஷன்

# மட்டக்களப்பில் தமிழிற்கு ஓர் அரண்மனை

தெய்வத்தமிழ் எனப்படுகின்ற பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையில் வைத்துப் போற்றப்படுகின்ற திருமந்திரம் அட்டமாசித்திகளும் கைவரப்பெற்ற தலைமைச் சித்தராக விளங்கும் திருமூலரால் இயற்றப்பட்ட தெய்வ சக்தி நிறைந்த மந்திர நூல். இறைவன் உறையும் கற்பக்கிரகங்கள்தான் கருங்கல்லில் அமைக்கப்படுவது வழமை. திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் பாடல்களையும் கருங்கல்லில் பதிக்கும் போது அதன் தெய்வீகம் பலமடங்காக அதிகரிக்கிறது. தமிழ் மொழியினதும் சைவ சமயத்தினதும் ஒப்பற்ற நூலாகிய திருமந்திரங்கள் மூவாயிரத்தையும் கருங்கல்லில் பதிப்பித்து கொக்கட்டிச்சோலையில் தான்தோன்றீச்சரர் ஆலய முன்றலில் திருமந்திர அரண்மனை எழுப்பியிருக்கிறார்கள் சிவபூமி அறக்கட்டளையினர்.



அங்கே நடுநாயகமாக வீற்றிருக்கும் முகலிங்கப் பெருமானுக்கான கருங்கற் கோயிலின் கும்பாபிஷேகமும் சிவபூமி அறக்கட்டளை தாம் நிர்மாணித்த திருமந்திர அரண்மனையை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வும் கடந்த மாதம் 24.03.2023 அன்று நடைபெற்றது. நீண்ட வரிசையில் காத்திருந்து அடியவர்கள் ஆயிரக்கணக்கில் எண்ணெய்க்காப்பு சாத்தியமையும், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்து குடமுழுக்கு நிகழ்வுகளில் பக்தர்கள் பங்குகொண்டமையும் திருமந்திரத்திற்கு ஈழத்து தமிழ் மக்கள் அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்தியம்பின.

ஈழத்தை சிவபூமி என்று அழைத்த திருமூல நாயனாரின் மூவாயிரம் பாடல்களை சிவபூமியே சிவபூமியில் பதிப்பித்துள்ளமை இறை செயல் என்றுதான் சொல்ல வேண்டும். ”உலகத்தின் மிகப்பெரிய சொல் செயல்” என வாழும் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு தமிழ்ச் சமுகம் என்றென்றும் தலைவணங்குகிறது.

திருவாசகம் போன்று திருமந்திரத்தையும் காலம் உள்ளவரை நிலைபெறச் செய்யும் உயரிய நோக்கோடு செஞ்சொற்செல்வர் அவர்கள் அத்தனை பாடல்களையும் கருங்கல்லில் பதிப்பித்துள்ளார்கள். இதே போல முன்னைய காலத்திலும் திருமந்திரத்தின் மேன்மையை உணர்ந்த மன்னர்கள் ஓலைகளில் இருந்தால் அழிந்துவிடுமென அஞ்சி, அவற்றை செப்பேடுகளில் பதிப்பித்தார்கள். தமிழ் மொழியில் மந்திரங்களா? அர்ச்சனைக்குரிய அந்தஸ்து தமிழ் மொழிக்கு உண்டா? என்ற சந்தேகம் கொண்ட சிலர் திருவாவடுதுறை ஆலய





பலிபீடத்தின் கீழ் அவற்றை மறைத்து வைத்தார்கள். ஞான சம்பந்தக் குழந்தை அங்கே தமிழ் மணம் கமழ்வதை குறிப்பால் உணர்ந்து, அந்த செப்பேடுகளை மீட்டதாக வரலாறு.

சைவசித்தாந்த நூலாக மட்டுமல்ல, கீதையைப் போல ஒரு யோக நூலாகவும், இறை துதிபாடும் பக்தி நூலாகவும், வைத்திய உண்மைகள் கூறும் மருத்துவ நூலாகவும் கூட காணப்படுகின்றமை திருமந்திரத்தின் தனிச்சிறப்பாகும். இதனால்த்தான் ”தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்கு திருமந்திரம்” என்று எம்முன்னோர் வகுத்துள்ளார்கள். இந்த இரண்டிற்குமே ஈழமணித்திரு நாட்டில் தனித்தனி அரண்மனைகள் எழுப்பப்பட்டுள்ளன என்பது மேலும் சிறப்பு வாய்ந்தது.

வேதமும் ஆகமும் சைவசமயத்தின் அடிப்படையாக இருந்திருப்பினும் அவற்றுக்கு தமிழ் வடிவம் அதுவரை இருக்கவில்லை. சமஸ்கிருத மொழியில் இருந்தமையால் தமிழர்கள் அதனை பொருள் உணர்ந்து சொல்ல முடியாமல் தவித்தனர். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து தான் சொல்ல

வேண்டும். அதே நேரம் பக்திக்கு ஒரு மொழி தடையாக இருக்கக் கூடாது. இதனால் சமஸ்கிருத மொழியில் இருந்த வேதாகமங்களை தமிழில் மொழி பெயர்த்து ஒன்பது தந்திரங்களாக அவற்றை பிரித்து மூவாயிரம் பாடல்களில் அழகு தமிழில் தந்தவர் திருமூலர். காரணம், காமிகம், வீரம், சிந்திய, வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் எனும் ஒன்பது ஆகமங்களின் சாரமாக திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளன.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் ஒழுக்க நெறிகளையும், அறநெறி சார்ந்த ஆன்மீக சிந்தனைகளையும் மக்களுக்கு போதிக்கும் ஒரு உன்னத நூல் என்பதால் ஆங்கிலத்தில் கூட திருமந்திரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வாசிக்க வாசிக்க பல்வேறு உள்ளார்ந்த அர்த்தங்களை நித்தமும் தரவல்லது என்பதால் பல சிவநேயச் செல்வர்கள் இன்றளவும் தாம் இந்நூலில் வியந்தவற்றை விளக்கவுரையாக்கி எழுதிவருகின்றனர்.

சுந்தர மூர்த்தி நாயனாரால் நம்பிரான் என்று அழைக்கப்பட்ட சிறப்புக்குரியவர் திருமூலர். பிரான்





என்றால் தலைவன் என்று பொருள். திருமூலரை எப்படி தலைவராகிறார்? தான் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெற்றுய்ய வழி ஏற்படுத்தி பொதுநலக் காரியம் ஆற்றுவது தலைவனுக்குரிய முக்கிய கடமை. அதை செவ்வனே செய்தவர் திருமூலர். பின்வரும் திருமந்திரப்பாடல் இதனை சான்று பகிர்கிறது.

“நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள், சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்ற தலைப்படும் தானே”

இணையில்லாத இந்த திருமந்திரப் பாடல்கள் யாவும் காலம் உள்ளவரை கருங்கல்லில் இருக்குமாறு செய்வித்த இந்த புண்ணியச் செயலுக்கு தமிழ் சமூகமும், சைவ மக்களும் என்றென்றும் நன்றிக்கடன் மிக்கவர்களாக தம் அடுத்த அடுத்த தலைமுறைக்கு இவ்வரிய பொக்கிஷத்தை கடத்துபவர்களாக இருக்கவேண்டும் என்பதே பெரும் பிரார்த்தனை ஆகும்.



# பரியாரியார் VS அய்யர்

தொண்டரடிப்பொடியன்

நல்ல இடம்!
நல்ல நாள்!
ஆனால் நன்றாக அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள்... பூசைக்கு நேரம் இருக்கிறதே? யார் அடித்தது மணி?

கௌசல்யா மெல்ல மெல்ல எட்டிப் பார்த்தாள். ஆனால் யாருமே மணிக் கோபுரத்தில் இல்லை. இன்னும் பயம் அதிகரித்தது. யாரோ தங்களைக் கண்டுவிட்டார்கள் என்பது இருவருக்குமே உறுதியானது. ஆனால் யார்?

பரதனை பின் வீதியிலேயே நிற்குமாறு சைகை காட்டி விட்டு, கௌசல்யா முன் வீதிக்கு சென்றாள். காதலில் விழுந்தவுடன் வரும் தைரியங்களுக்கு அவள் மட்டும் விதிவிலக்கா என்ன? அதோடு கோயிலில் பரதனை விட கௌசல்யா தானே உரிமைக்காரி. வேறு யாரும் எளிதில் கேள்வி கேட்க முடியாத அய்யர் வீட்டு குலவிளக்கு ஆச்சே! ஆனால் அய்யரே வந்திருந்தால்த்தான் ஆபத்து. ஆனால் மாமா வந்திருந்தால் பூசை நேரத்திற்கு முன்பே மணி அடிக்க மாட்டார். தங்களைக் கண்டிருந்தால் அவர் அடிப்பது மணியாய் இருக்காது. இவை தெரிந்ததால்த்தான் கௌசல்யா தைரியமாக முன் வீதிக்கு சென்றாள்.

அங்கே யாருமே இல்லை! மணிக் கோபுரத்திற்குள்ளும் பார்த்தாள். ஒருவரும் இல்லை! ஆனால் மணிக்கயிறு மட்டும் மேலே கீழே போய் வந்து கொண்டிருந்தது. அப்படியென்றால் யார் அடித்தது? கோயில் வாசலிலுக்குச் சென்று வெளி வீதியைப் பார்த்தாள்.

அய்யய்யோ... அய்யர் கோயிலை நோக்கி தன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

சோளகக்காத்து வீசிக்கொண்டிருந்த அந்த நேரத்திலும் வேர்த்துக் கொட்டியது கௌசல்யாவுக்கு. அப்பா வரும் போது வாசலிலேயே நின்றால் இன்னும் ஆபத்து என்று உள்ளே செல்லத் திரும்பினாள். திரும்பியவளுக்கு மேலும் அதிர்ச்சி. அங்கே அம்மா சரோஜா கையில் அரைவாசியாக கட்டி

முடிக்கப்பட்டிருந்த மாலையுடன் நின்றுகொண்டிருந்தாள். ஆயிரம் கேள்விகள் அவள் மனதில் எழுந்தாலும் அத்தனையையும் தாண்டி வசமாக மாட்டிக் கொண்டோம் என்கிற பயமே அவளை ஸ்தம்பிக்க வைத்தது. ஆனால் சரோஜா முகத்தில் எந்தவித கோபமோ பதட்டமோ இல்லை. பாதி கட்டப்பட்ட மாலையை மகள் கௌசல்யாவிடம் கொடுத்து கட்டி முடிக்கச் சொன்னாள் சரோஜா.

நடப்பது எதுவுமே கௌசல்யாவுக்கு புரியவில்லை. அம்மா எப்படி கோயிலுக்கு உள்ளே? அம்மாவுக்கு எல்லாம் தெரியுமா? தெரியாதா? மணி அடித்தது அம்மாவா? மாலையை ஏன் என்னிடம் தருகிறார்? பரதன் நிலை என்ன? இப்படி ஆயிரம்



கேள்விகளோடு தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் கௌசல்யா.
அதற்குள் அய்யர் வந்துவிட்டார்.

“இதென்ன ஒருநாளும் இல்லாத திருநாளா தாயும் மகளும் முதலே கோயிலுக்கு வந்திட்டீங்க?”

“திருநாள் தானே இன்றைக்கு” சொல்லிவிட்டு கடைக்கண்ணால் கௌசல்யாவை பார்த்தாள் சரோஜா.

“பங்குனித் திங்களுக்கு வராத என்ட தங்கச்சி, மகளையும் கூட்டிக்கொண்டு பங்குனி உத்திரத்திற்கு வந்ததை நினைக்கத் தான் ஆச்சரியமா இருக்கு.” சரோஜா கோயிலுக்கு வருவதை குறைத்துக் கொண்டதை சொல்லாமல் சொல்லிவிட்டார் அய்யர்.

“அண்ணா, இப்ப நான் கோயிலுக்கு வரக்கூடாது என்றீங்களா?” அய்யருக்கு பதில் சொல்லப்போனால் சிக்கல் என்பதால் கேள்விகளாக திருப்பிவிட்டாள் சரோஜா.

“மூக்கு மேல கோபம் மட்டும் வந்திடும். அது இருக்கட்டும். பூசைக்கு நேரம் இருக்கேக்க யார் மணி அடிச்சது?” கௌசல்யாவுக்கு இருந்த அதே கேள்வியை அய்யரும் கேட்டார்.

“இவ்வளவு நாளா கோயிலுக்கு வாற அண்ணாக்கு, மணிக்கூண்டுக் கோபுரத்தில இருக்கிற தூசி ஒட்டடை கண்ணுக்குத் தெரியல போல. அப்பப்பா எவ்வளவு தூசி.

அத துடைக்கப்போனா தவறுதலா மணி அடிபட்டுடுது.”

“சரி சரி பூசைக்கு நேரமாகுது... பிறகு கதைப்பம். பிள்ளை கௌசல்யா! கெதியா மாலையை கட்டிட்டு வா.” சொல்லிவிட்டு உள்ளே போன அய்யர் பின் வீதியிலிருந்து மண்வெட்டியோடு வந்து கொண்டிருந்த பரதனைக் கண்டுவிட்டார்.

“அட.. நம்ம பரியாரியாரின்ட பெடியனா! என்ன தம்பி இந்தப் பக்கம்?”

கௌசல்யாவுக்கு தலையே சுற்றத் தொடங்கிவிட்டது. பரதனும் முழிக்கத் தொடங்கினான்.

குறுக்கிட்ட சரோஜா, “உங்களுக்கு ஒருத்தருமே கோயிலுக்கு வரக்கூடாதா அண்ணா? வாற எல்லாரையும் ஏன் வந்தாய் என்பது போலயே கேக்கிறீங்க?”

”நீ என்ன தங்கச்சி! தொட்டதுக் கெல்லாம் கோவப்படுறாய்?”

“பின்னை என்ன அண்ணா! அந்த தம்பி பாவம்! வெள்ளனவே வந்து கோயில் வீதியில இருந்த புல் எல்லாம் செதுக்கிப் போட்டு நிக்கிறார். அவனைப் பாராட்டாமல் கேள்வி கேட்கிறீங்க.”


”அட அப்படியா.. நல்ல விசயம் தம்பி.. நீ மட்டும் கஷ்டப்படாம உங்க சங்கத்துப் பெடியளையும் கூட்டிட்டு வந்து சிரமதானம் போல செய்தா நல்லா இருக்கும்.” என்று சொல்லிக் கொண்டே அய்யர் கோயிலுக்குள் சென்றார்.

பரதனுக்கும் கௌசல்யாவுக்கும் நடப்பவை எல்லாமே புதிராகவே இருந்தது. பின் வீதியில் தான் ஒளித்துவிட்டு வந்த பரதன் கைகளில் மண்வெட்டியை கொடுத்ததும் அம்மாவாகத்தான் இருக்க வேண்டுமென கௌசல்யா எண்ணி சரோஜாவைத் திரும்பி பார்த்தாள்.

“மாலையைக் கட்டிட்டு கெதியா வா.. நான் போய் அபிசேகத்துக்கு பஞ்சாமிர்தம் செய்யப்போறன்” என்று சொல்லிவிட்டு அப்பால் சென்றால் சரோஜா. எல்லாம் தெரிந்திருந்தும் எதையும் வெளிக்காட்டவில்லை.

வசமாக மாட்டிக் கொண்டோமோ என்று பயந்து கொண்டிருந்த கௌசல்யாவையும் பரதனையும் அய்யர் நம்பும் படியாக பொய்க்கதை சொல்லி சரோஜா ஏன் காப்பாற்ற வேண்டும்? இந்தக் கேள்வி தான் இப்போது அந்தக் காதல் ஜோடிகள் மனதில் மட்டுமல்ல, வாசகர்களான உங்கள் மனதிலும் இருக்கும்.

**காத்திருங்கள்...**





# விழித்தவெரெல்லாம் பிழைத்துக்கொள்வார்!

**போதைப் பொருள் எனும் மாய வலையில் சிக்கி அதிலிருந்து விடுபட முயற்சிக்கிறீர்களா?**

**அல்லது**

**உங்கள் உற்ற நண்பனை அந்த வலை யிலிருந்து காப்பாற்ற நினைக்கிறீர்களா?**

**மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் சிகிச்சைகள் அழித்து சமுகத்திலிருந்து தொலைந்துவிட்ட உங்களை சமூகத்திற்கு திருப்பி அளிக்க தயாராக இருக்கிறார்கள் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை.**





**தொடர்புகளுக்கு 1927**
**(24 மணிநேர இலவச சேவை)**

# போதைப் பொருட்கள் பற்றி யார் என்ன சொன்னாலும் உண்மை என்ன தெரியுமா?



→ கறுத்த உதடுகள், துர்நாற்றமான வாய், சிவந்த கண்கள், குழி விழுந்த கன்னங்கள் என்பவற்றைக் கொண்ட நோய்வாய்ப்பட்ட அசிங்கமான உடல் வெகுவிரைவிலேயே கிடைப்பதை நான் விரும்பவில்லை.




→ பாலியல் பலவீனம் ஏற்பட்டு ஆண்மைக் குறைபாட்டுடன் மகிழ்ச்சியற்ற பூரணமற்ற வாழ்க்கையை நான் வாழ இந்தப் பூமியில் பிறக்கவில்லை.

→ எனது அம்மா அப்பா கஷ்டப்பட்டு சம்பாதித்த காசை எவனோ ஒரு போதைவஸ்து தரகர் பணக்காரனாவதற்காக நான் ஏமாந்து செலவழித்து சொந்தக்காசில் சூனியம் வைக்க மாட்டேன்.



→ சினிமாக்களிலும், விளம்பரங்களிலும் காட்டப்படும் போதைவஸ்து சம்பந்தமான போலி விளம்பரங்களில் ஏமாந்து விடமாட்டேன்.

→ இந்த சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அங்கீகாரமும் கிடைக்காது தலைகுனிந்து வாழ எனக்கு உடன்பாடில்லை.





→ ஓர் தலைமுறையை போர் தின்றுவிட இன்னோர் தலைமுறையை போதை தின்பதற்கு அனுமதிக்க மாட்டேன்.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

# விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர்






ஒருவரது எதிர்காலத்தையே நிர்மூலமாக்கிவிடும் போதைப்பொருள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அபயம் அறக்கட்டளை ஏற்பாட்டில் சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் முன்னெடுக்கும் ***விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர்*** செயற்திட்டத்தின் கீழ் பாடசாலைகள் தோறும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுவருவதுடன், வைத்தியர்களால் மாணவர்வளுடனான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டு பாடசாலைகள் தோறும் சமுகநெறிக் கழகம் உருவாக்கப்பட்டு வருகின்றன.













துமி மின்னிதழ் 50 இதழ்களை கடந்து பயணிப்பதை முன்னிட்டு தமிழ்க் கல்விக்கூடம் குறோளி அனுசரணையில் இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் இடையே நடாத்தப்பட்ட ”ஆய்வு அரசர்கள்” என்கிற ஆய்வுப் போட்டியில் எமக்கு கிடைக்கப்பெற்ற ஆய்வுகளில் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு பரிசில் பெறுகின்ற முதல் மூன்று வெற்றியாளர்கள்...

1. செல்வி. தெ. வஜிதா (முதலாம் இடம்)
2. செல்வி. ப. டியனி (இரண்டாம் இடம்)
3. செல்வி. ஜெ. சிவச்சித்ரா (மூன்றாம் இடம்)

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மற்றும் அதிபர் எஸ். சாந்தகுமார் ஆகியோர் வழங்கினார்கள்.

எமது மண் சார்ந்ததும் மக்கள் சார்ந்ததுமான இவர்களது ஆய்வுகள் துமி மின்னிதழில் தொடராக வெளிவருகிறது.







# உலகமயமாக்கலில் கொவிட்-19 இன் தாக்கம்

ப. டியனி

உலகமயமாக்கல் என்பது தங்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒன்றாக இணைந்திருத்தலாகும். இவ் உலகமயமாதல் என்னும் பதமானது பேராசிரியர் டேவிட் என்பவர் மூலமாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுவாக நாடுகளின் பணிகள், பண்டங்கள், மூலதனம், உழைப்பு, தொழில்நுட்பம், மனித மூலதனம் போன்றவற்றின் மீது எவ்வித தடையும் ஏற்படாது உலகின் பல்வேறு ஆதாரங்களை ஒன்றாக இணைக்கும் ஒரு செயன்முறை உலகமயமாக்கலாகும். உலகமயமாக்கலின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குரிய சர்வதேச சந்தைகள் ஒருங்கிணைக்கப் படுகின்றன.

அதாவது உலகமயமாதல் என்பது புறக்காரணிகளால் தூண்டப்பட்டு ஒரு நாட்டில் ஏற்படும் மாற்றங்களை குறிக்கின்றது. இம் மாற்றங்கள் கடந்த காலங்களிலிருந்து பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் உலகெங்கிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில் நாடுகளிடையே தொடர்பாடல், வர்த்தகம், முதலீடு என்பன குறித்து கூடிய தொடர்புகளையும் ஒருங்கிணைப்புகளையும் ஏற்படுத்துதல் உலகமயமாக்கலாகக் காணப்படுகின்றது. அடிப்படையில் சர்வதேசமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறையை உலகமயமாக்கலானது குறித்து நிற்பதோடு தற்போது பொருளாதார, சமூக, கலாசார, அரசியல், சார்ந்த உலகமயமாதலாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகமயமாக்கல் மூலமாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் சாதகமான விளைவுகளையும் பாதகமான விளைவுகளையும் எதிர்கொள்கின்றன. உலகமயமாக்கலின் விளைவால்




தோன்றிய கொவிட் - 19 வைரசானது உலகளாவிய ரீதியில் எதிர்பாராத பாரியளவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இவ் கொவிட் - 19 வைரசானது 2019 டிசம்பரில் சீன நாட்டின் வூபோய் மாகாணத்தின் தலைநகராக விளங்கும் வூகானில் முதன் முதலாக அடையாளம் காணப்பட்டு பின்னர் படிப்படியாக உலக நாடுகளையும் பற்றிக் கொண்டது. இதன்படி ஜனவரி 30 அன்று கொவிட் - 19 தொற்றை உலகளாவிய ரீதியிலான பொது சுகாதார அவசர நிலையாகவும் மார்ச் 11 அன்று ஒரு பெருந்தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்திருந்தது. ஆகஸ்ட் 31 2020 இன் நிலவரப்படி 216 நாடுகளில் கொவிட் - 19 வைரஸின் தாக்கம் காரணமாக 24,854,140 மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இதில் 838,924 பேர் உயிரிழந்திருந்தனர். இலங்கையை பொறுத்தவரையில் 31.08.2020 இன் அரச தரவின்படி 2,995 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டதோடு அதில் 2,860 மக்கள் குணமடைந்திருந்தனர்.

உலகளாவிய ரீதியில் அமெரிக்காவில் 5,855,521 பேர் கொவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதில் 838,924 பேர் உயிரிழந்திருந்தனர். உலகில் கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலாவது இடத்தில் காணப்பட்டது. உலகையே ஆக்கிரமித்து காணப்படும் கொவிட் - 19 வைரசானது உலக நாடுகளுக்கு இன்றைய நிலையில் மிகப் பெரியதொரு சவாலாகக் காணப்பட்டது. குறிப்பாக உலகமயமாக்கலில் பாரியளவான தாக்கத்தை கொவிட் - 19 வைரசானது ஏற்படுத்தியிருந்தது. உலகமயமாக்கலால் நன்மை மட்டுமல்ல மாறாக ஆபத்துக்கள் மற்றும் பாதிப்புக்களும் ஏற்பட்டன. இக் கொவிட் - 19 இன் வைரசினால் உலகமயமாக்கலில் ஏற்படும் தாக்கத்தை சமூக மற்றும் சூழலியல் ரீதியான தாக்கம் என வகைப்படுத்தி நோக்க முடியும்.

## கொவிட் ~ 19 மற்றும் சூழல் தாக்கம்

பயணத் தடை, தொழில் துறைகள் மூடப்பட்டமை காரணமாக வளி மாசுபாடானது குறைவடைந்திருந்தது. அதேவேளை பயணத்தடைகள் மூலமாக சீனாவில் 25% கார்பன் வெளியேற்றம் குறைவடைந்திருந்தது. இதன்படி சீனா 2019ம் ஆண்டு இதே காலகட்டத்தில் உற்பத்தி செய்த கார்பன் டை ஆக்சைட் சுமார் 200 மில்லியனுக்கும் குறைவாகவே உற்பத்தி செய்திருந்தது. அதேபோல் தொழிற் சாலைகளிலிருந் து வெளியேறும் நைட்ரஜன் ஆக்சைடு வெளியேற்றத்தில் குறிப்பிடத்தக்க சரிவானது ஏற்பட்டிருந்தது. இவ்வாறு



வளிமாசடைவுக்கு காரணமான வாயு வெளியேற்றங்கள் (Lockdown) தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக குறைந்தது.. அதேபோல் கடல்வழி போக்குவரத்து, மீன்பிடித்தல் என்பன குறைவடைந்தமையினாலும் தொழிற்சாலை கழிவுகள் குறைவடைந்தமையினாலும் நீரின் தூய்மையும் பேணப்பட்டிருந்தது.

நீர் மாசடையும் தன்மை கொவிட் - 19 இனால் குறைவடைந்திருந்தது. அதுமட்டுமல்லாமல் நீர் வாழ், நிலவாழ் உயிரினங்கள் மனிதர்களின் நடமாட்டம் குறைவடைந்தமையினால் சுதந்திரமாக சுற்றித்திரியும் நிலையும் காணப்பட்டது. அத்தோடு மிருகங்களை வேட்டையாடுதல் குறைவடைந்திருந்தது. மேலும் சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கைகள் குறைவடைந்திருந்தன. இதன் விளைவாக மரங்கள் வளர்ந்து இயற்கை எழுச்சியோடு காணப்பட்டன. இதன் மூலமாக வளிமாசுபடுதல், நீர் மாசுபடுகள் குறைவடைந்து இயற்கை சூழலில் தூய்மை பேணப்படும் நிலை உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

மேலும் கொவிட் - 19 இனால் தொழிற்சாலைகள் கழிவுகள் குறைவடைந்து வீட்டுக்கழிவுகள் அதிகரித்து காணப்பட்டன. அதேபோல் வைத்தியசாலை கழிவுகளான முகமூடி, ரிசு போன்ற கழிவுகள் அதிகமாக வெளியேற்றப்பட்டமை கொவிட் - 19 இனால் ஏற்பட்ட சூழல் ரீதியான தாக்கமாகும். எடுத்துக்காட்டாக சீனாவின் வுகாவினில் வைத்தியசாலை கழிவுகள் 200 டொன்னுக்கும் அதிகமாகும். மேலும் பிளாஸ்டிக் பாவனை அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கு கொவிட் - 19 இனால் சூழலியல் ரீதியான உலகமயமாக்கலில் ஏற்பட்டிருந்தது.

## கொவிட்-19 மற்றும் சமூகத்தாக்கம்

கொவிட் - 19 இனால் சமூக ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களாக கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை தோன்றியிருந்தது. அதாவது கொவிட் - 19 காரணமாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என அனைத்து கல்விசார் நிறுவனங்களும் மூடப்பட்டதனால் சிறுபிள்ளைகள் தொடக்கம் முதுமானிப்பட்டம் முடித்தவர்கள் வரை அனைவரும் கொவிட் - 19 பாதிக்கப்பட்டிருந்தனர். உலகளாவிய ரீதியில் சுமார் இரண்டு பில்லியன் கல்வியியலாளர்கள் கொவிட் - 19 இனால் தமது கற்கை நெறிகளில் பின்னடைவை எதிர்நோக்கியிருந்தனர். மேலும் கொவிட் - 19 இனால் சமூக உலகமயமாக்கலில் ஏற்பட்டுள்ள மற்றுமொரு தாக்கம் தகவல் தொடர்பாடல் பாவனை



அதிகரித்தமையாகும். கொரோனா காரணமாக ஏற்டும் இடையூறுகளை தவிர்ப்பதற்காக, அதாவது கொவிட் - 19 இனால் ஏற்பட்ட இடையூறுகளை தவிர்க்கவும் அன்றாட வாழ்கையை கொண்டு செல்வதில் காணப்படும் தடைகளை தவிர்க்கவும் இணையத்தளமானது அதிகளவில் பயன்படுத்தப்பட்டது. **ITU** மதிப்பீட்டின் படி உலக சனத்தொகையில் 53 வீதமானோர் இணையத்தை பயன்படுத்துவதாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இணையத் தளத் தினுாடாக தமது கல்வி, தொழில் மற்றும் அத்தியாவசிய செயற்பாடுகளை மேற்கொள்ளல் நன்மை பயக்கவில்லை. இணையத்தில் விளையாடல் மற்றும் அநாவசியமான இணையத்தளங்களை பாவித்தல் இணையத்திற்கு அடிமையாதலின் மூலமாக உடல், உள ரீதியான பல பாதிப்புக்கள் அதிகமாகவே ஏற்பட்டிருந்தன. மேலும் கொவிட் - 19 நோய்த்தொற்று காரணமாக பலர் வீட்டினுள்ளேயே இருத்தல் மன உளைச்சலுக்கு ஆளாகுவதற்கு வாய்ப்பை அதிகளவில் ஏற்படுத்தியதோடு கொவிட் - 19 காலத்தில் தற்கொலைகளும் இடம்பெற்றிருந்தன..




## கொவிட் - 19 மற்றும் சுற்றுலாத்துறை

கொவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட முக்கிய துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டது. அதாவது கொவிட் - 19 தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக உலக நாடுகள் நாட்டினை முடக்குதல் **(Lockdown)**, சர்வதேச ரீதியான விமான பயணங்களை இரத்து செய்தல், விமான நிலையங்களை மூடுதல், பயணக்கட்டுப்பாடுகளை விதித்தல், எல்லைகளை மூடுதல், கடல்வழி, வான்வழி போக்குவரத்துக்களை தவிர்த்தல் போன்ற பல கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியிருந்தது. இதன் நேரடி விளைவாக பாதிக்கப்பட்ட முதல் தர துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டது. சுற்றலாத் துறையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சமூக பொருளாதாரத்துக்கான அடிப்படை அம்சமாக காணப்படும் அதேவேளை பல நாடுகளில் **30% - 80%** வரையிலான ஏற்றுமதியில் சுற்றுலாத்துறையின் பங்கு காணப்பட்டது. ஆனால் 2020 ஜனவரி - ஏப்ரல் மாதங்களிலே சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை 47% இனால் குறைவடைந்திருந்ததோடு வேலையிழப்பு, அந்நிய செலாவணி மற்றும் வரி வருமானங்களை இழக்கும் நிலை பல நாடுகளுக்கு ஏற்பட்டிருந்தன.

உலகளாவிய ரீதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது பெப்ரவரியில் 12% ஆகவும் மார்ச்சில் 55% ஆகவும் ஏப்ரலில் 97 வீதமாகவும்

குறைவடைந்து சென்றிருந்து. குறிப்பாக சுற்றுலாப்பயணிகள் தத்தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதன் மூலம் பொருளாதார உலகமயமாக்கலானது பல்வேறு சவால்களை எதிர்நோக்கியிருந்தது. எடுத்துக்காட்டாக இலங்கையை நோக்கினால் இலங்கை வரலாற்றில் 2020 ஏப்ரல் பூச்சிய உல்லாச பயணிகள் வருகை தந்த வருடமாக காணப்படுவதோடு இவ் வீழ்ச்சி பல்வேறு வகையில் இலங்கையின் பொருளாதாரத்தை பாதித்திருந்தது.

அந்தவகையில் சுற்றுலாத்துறை என்பது ஒரு நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒரு துறையாகும். அவ்வருமானமானது கொவிட்-19 இனால் குறைவடைந்திருந்தது. அதாவது இலங்கைக்கு மொத்த வெளிநாட்டு ஏற்றுமதி மூலம் 2018 ஆம் ஆண்டில் 11 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமானது கிடைக்கப்பெற்றிருந்தது. அதே ஆண்டில் இறக்குமதியினளவானது ஏறத்தாழ 22.5 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. இறக்குமதிக்கு செலவு செய்யப்பட்ட 11.5 பில்லியன் அமெரிக்க



டொலர்களும் உல்லாசப் பயணத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலமாகவே ஈடுசெய்யப்பட்டது. ஆனால் கொரோனா தொற்று காரணமாக சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையானது மென்மேலும் அதிகரிக்க கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்டன.

இந்த இழப்பை ஈடுசெய்வதற்கு நாட்டில் சாதாரண நிலை தோன்ற வேண்டியிருந்தது. சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தமையானது மறை முகமாக வேலைவாய்ப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார உலகமயமாக்கலுக்கும் அச்சுறுத் தலை ஏற்படுத்தியிருந்தது. அதாவது உல்லாசப் பயணத்துறையால் உலகளாவிய ரீதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் வேலைவாய்ப்பினை பெற்றிருந்தனர். குறிப்பாக இலங்கையில் ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் சுற்றுலாத்துறை மூலமாக வேலைவாய்ப்பினை பெற்றிருந்தனர். கொவிட்-19 இனால் நான்கு இலட்சம் இலங்கையர்கள் முற்றாக வேலையிழந்திருந்தனர். இதனால் தனிநபர் வருமானம் குறைவடைந்திருந்தது.

மேலும், சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு நிலுவையில் பாரிய பற்றாக்குறையை உருவாக்கி இறுதியாக மூலதனக் கணக்கூடாக சென்மதிநிலுவையில் மூலதனப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உலக நாடுகளிலும்,

உலக நிதி நிறுவனங்களிலும் கடன்பெற வேண்டிய நிலையை தோற்றுவித்திருந்தது. ஏற்கனவே இலங்கை உட்பட பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கடன் சுமையால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் கொவிட் - 19 இனால் நாடுகளில் மென்மேலும் கடன்சுமை அதிகரித்திருந்தது.

இவ்வாறு கொவிட் - 19 இன் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி, கடன் சுமை என்பன அதிகரித்து அதன் விளைவாக நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு இலங்கையை நிதி நெருக்கடிக்குள் இட்டுச்சென்றிருந்தது. அதேபோல் இலங்கையில் கொவிட் - 19 இனால் ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதிகள், உல்லாசப்பயணிகளின் வருகை வெளிநாட்டு பண அனுப்புதல்களின் அதிகரிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீடு என்பன அதிகரிக்கும் போது அந்நியச் செலாவணிகள் உட்பாய்ச்சல்கள் அதிகரித்து ரூபாவின் புற பெறுமதி அதிகரிக்கும். மாறாக கொவிட் - 19 இனால் இது பாதிக்கப்பட்டதால் இவையனைத்தும் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக இலங்கையின் ரூபா பெறுமதி வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஆகஇ கொவிட்-19 பல வழிகளில் உலக இயக்கத்தை திசை திருப்பியிருக்கிறது.




ஆகவே, கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் தன்மையானது இலங்கையின் பொருளாதாரத்தின் செயலாற்றம் பல்வேறு நிச்சயமற்ற காரணிகள் மீது தொங்கி நிற்கின்ற நிலையினை ஏற்படுத்தியிருந்தது. இவை, உலகளாவிய தொற்றுநோய் மேலும் வியாபித்தல், தணிப்பு வழிமுறைகளின் தீவிரம் மற்றும் வினைத்திறன், நிரம்பல் சார்ந்த குழப்பங்களின் அளவு மற்றும் நடத்தைசார் மாற்றங்கள் மற்றும் ஏனைய பொருளாதார படிவங்களின் நிலைத்திருக்கும் தன்மை என்பவை யாவினதும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரங்கள் இரண்டுக்கும் தொடர்புடையனவாக இருந்தன. உலகளாவிய பொருளாதார நடவடிக்கையின் மீட்சி மெதுவானவொரு வழிமுறையாக இருக்கும் சாத்தியம் இருந்தபோதிலும், இலங்கையின் திரண்ட கேள்வியில் கணிசமான பகுதிக்கு உள்நாட்டுக் கேள்வி வகிபாகம் கொண்டிருப்பதனால் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் முகமான வழிமுறைகள் என்பன இலங்கையின் விரைவான மீட்சியை இயலச்செய்யும்.

## உலகில் மகிழ்ச்சியான நாடு

உலகில் மகிழ்ச்சியான நாடுகளில் தொடர்ந்து 6 வது ஆண்டாக பின்லாந்து முதலிடம் பிடித்துள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, இஸ்ரேல், நெதர்லாந்து, சுவீடன், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இதில் ஒரு நாட்டின் மகிழ்ச்சி, சமூக ஆதரவு, வருமானம், சுகாதாரம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இல்லாமை ஆகியன கருத்திற் கொள்ளப்படுகின்றன.



## உலகின் பாரமான முள்ளங்கி



உலகின் அதிக எடை கொண்ட முள்ளங்கியை உற்பத்தி செய்து ஜப்பான் நிறுவனம் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. உரம் மற்றும் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் மாண்டா ஃபெர்மன்டேஷன் எனும் ஜப்பானிய நிறுவனம் இந்த உலக சாதனை படைத்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை யாரும் பதிவு செய்யாத வகையில் 45.865 கிலோ கிராம் எடையும், 113 சென்டிமீட்டர் சுற்றளவு மற்றும் 80 சென்டிமீட்டர் நீளம் கொண்ட முள்ளங்கியை உற்பத்தி செய்துள்ளது.

## பின்தொடர்பவர்களை அதிகம் கொண்ட பெண்

இன்ஸ்டாகிராமில் அதிக பின்தொடர்பவர்களைக் (Fllowers) (400 மில்லியன் +) கொண்ட பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார் அமெரிக்க பாடகி செலினா கோம்ஸ். 380 மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்ட பெண்ணாக வலம் வந்த பாடகி கைலி ஜென்னரை பின்னுக்குத்தள்ளி செலினா கோம்ஸ் உலக சாதனை படைத்துள்ளார்.





லோ.லோகேஸ்வரன்
ச.சஜீபன்

# இலங்கையில் இணையக்கல்வி

விஞ்ஞானத்தின் வருகையினால் உலகமே ஒரு குக்கிராமமாக சுருங்கிவிட்டது. விஞ்ஞானம் வானலாவிய ரீதியில் வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் பல செய்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் மருத்துவம், போக்குவரத்து, வர்த்தகம், அரசியல் உள்ளிட்ட சகல துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதுடன் கல்வித்துறையிலும் அளப்பரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஆரம்ப காலச் சூழலில் குருகுலக் கல்வியே காணப்பட்டது. இங்கு ஒழுக்கங்கள் கல்வியாக போதிக்கப் பட்டன. இம்முறை படிப்படியாக மாற்றமடைந்து மனனம் செய்யும் கல்வி, ஆசிரியர் மையக்கல்வி, மாணவர் மையக்கல்வி, தொழிற் கல்வி, தொழிநுட்பக் கல்வி வரை முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆரம்ப காலக் கல்வி ஏட்டையும் எழுத்தாணியையும் மையப்படுத்தி அமைந்ததுடன் தற்காலக் கல்வி கணணியையும் தொடுதிரையையும் உள்ளடக்கியதாக காணப்பட்டது.

இன்றைய கல்வி வளர்ச்சியில் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு அளப்பரியன. அதாவது தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகை, சஞ்சிகை மட்டுமன்றி கணணி இணையத்தின் பயன்பாடு கல்வி வளர்ச்சிக்கு படிக்கற்களாக அமைகின்றன.

கல்வித்துறையில் நவீன ஆய்வுகூட உபகரணங்கள், கற்பித்தல் முறைகள், டிஜிட்டல் முறையிலான கல்வியாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகளேயாகும். சர்வதேச நாடுகளில் இணையக் கல்வியின் பயன்பாடு மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. இலங்கையிலும் இதன் தாக்கம் அண்மைக் காலமாக



வேகமாக பரவி வந்தன. அதாவது கடந்த காலங்களில் பரவி வந்த கோவிட் 19 தொற்று பரவலானது இலங்கையின் அனைத்து துறைகளையும் பாதிப்படையச் செய்துள்ளது. இந்த பேரிடரினால் கல்வித்துறை படிப்படியாக பாதிக்கப்பட்டு வந்தது. மாணவர்கள் பாடசாலை, பல்கலைக்கழகம், கல்வி நிலையங்களுக்கு நேரடியாக சென்று கல்வி கற்க முடியாத நிலை தோன்றியிருந்தது. இதன் காரணமாக மாணவர்களின் கல்வியாண்டு காலம் வீணாகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற வல்லரசு நாடுகளைப் போன்று இலங்கையிலும் இணைய வழிக்கல்வி ஏற்படத் தொடங்கியது. கல்வி நடவடிக்கைகளை மாணவர்கள் வீட்டில் இருந்தே தொடரும் வகையில் இணைய வழிக்கல்வி முறையினை பின்பற்றி வருகின்றனர். இது போன்ற அசாதாரண சூழ்நிலையில் இது ஒரு சிறந்த தீர்வாகப் பார்க்கப்படுகின்றது. இன்றைய காலத்தில் அறிதிறன்பேசி (Smartphone) மடிக்கணணி, கணணி, முதலான தொழிநுட்பக் கருவிகள் கல்வி கற்க துணை செய்கின்றன. பாடசாலை, கல்வியற் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக





மாணவர்களுக்கு பல வசதிகளோடு இணையத்தில் கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு Webinar, Google meet, Zoom, Team link முதலான செயலிகள் அறிமுகமாயின. பாடசாலை மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இன்று இணையவழிக் கல்வி புதுவரவாக அமைகின்றது எனலாம்.

இணையவழிக் கல்வியினால் ஏற்படும் நன்மைகள் எண்ணிலடங்காதவை. இக்கட்டான சூழ்நிலையில் மாணவர்கள் வெளியில் செல்லாமல் பாதுகாப்பான முறையில் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர இணையவழிக் கல்வி முறை உதவுகின்றது. உணவு செலவு, பயணச் செலவு, தங்குமிட செலவு எதுவுமின்றி வீட்டில் இருந்தவாறே தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள முடிகின்றது. உலகின் எப்பாகங்களில் இருந்தும் தலைசிறந்த ஆசிரியர்களை இனங்கண்டு தாம் கற்கும் பாடங்களின் அறிவை மேம்படுத்த ஓர் அறிய வாய்ப்பாக அமைகின்றது. மாணவர்கள் E-Learning, E – Thakshalava போன்றவற்றின் மூலம் தாம் விரும்பிய பாடங்களின் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளல்,

தரவிறக்கம் செய்து கொள்ள முடிகின்றது.

மேலும் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க வேண்டும் என்ற நிலைமாறி தற்போது அவரவர் இருக்கும் இடத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் நிகழ்நிலையில் வகுப்புக்களில் பங்குபெறும் அளவிற்கு கல்வித்துறை வளர்ச்சியடைந்துள்ளது. Google, Youtube போன்ற வலைத்தளங்களில் தமக்குத் தேவையான கற்றல் விடய்ங்களை எந்நேரத்திலும் இலகுவாக பார்வையிட முடியும். இம்முறை மாணவர்களின் தேடல் ஆற்றலினை விருத்தியடையச் செய்கிறது. இணைய வழி கற்பித்தல் முறையில் நூலக வசதியை கொண்டு காணப்படுவது மாணவர்களுக்கு மாபெரும் சாதகமான ஓர் விடயமாகும். கற்பித்தல் முறையில் திரும்பத் திரும்ப கற்ற பாடங்களை பார்வையிடலாம்.

எனவே தற்போது இணையவழிக் கற்பித்தல் முறை வெறும் வகுப்பறைக் கற்பித்தல் போல் ஆசிரியரிடமிருந்து மாணவன் மட்டும் கற்கும் ஒருவழிப் பாதையாக மட்டும் அமையாமல் பல்வழிப் பாதை



கொண்ட முழுநிறைவு கொண்டதாக விளங்குகின்றது. மேலும் 2017 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட Smart class room நூறு கோடி ரூபா செலவில் ஆயிரம் பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் வழங்கள் போன்ற இலங்கை அரசினால் முன்னெடுத்து வருகின்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

எனினும் இணையவழி கற்றல், கற்பித்தல் முறையில் சில சிக்கல் தன்மைகள் காணப்படுவதனை நாம் யாவரும் அறிந்திருக்க வேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் இந்த இணைய வழிக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற நேரடியான கல்வி முறை போன்று இருக்காது. பல குறைபாடுகளையும் கொண்டு காணப்பட்டது. நேரடியாக கற்பது போன்று தெளிவாகவும் சந்தேகம் இன்றியும் கற்கின்ற வாய்ப்பை மாணவர்கள் இழக்கின்றனர். இணைய வழியில் நடக்கும் நீண்ட நேர வகுப்புக்களால் மாணவர்களுக்கு உடலியல் சார் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக கண் பாதிப்பு, தலைவழி போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

மேலும் அறிதிறன்பேசியை (Smart phone) பயன்படுத்தும் வசதி எல்லா மாணவர்களிடம் இருக்காது. அறிதிறன்பேசி இருந்தாலும் இணைய இணைப்பு எல்லா நேரமும் கிடைக்காது. குறிப்பாக கிராமப்புற மாணவர்களால் இணைய வழியில் கல்வி கற்க முடியாத சூழல் உருவாகி உள்ளது.

இதேபோல் உளவியல் ரீதியாக அதிக நேரம் கணனி மற்றும் கைபேசி பயன்படுத்துவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சித் திறன் பாதிப்படையும். இதன் மூலம் அவர்களுக்கு கவனச்சிதறல், தூ க்கமின்மை, கற்பனைத்திறன் குறைவு மற்றும் பதற்றம், பயம், மனஅழுத்தம் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. அத்துடன் கைபேசியில் வரும் விளையாட்டுக்களுக்கு சிறுவர்கள் அடிமையாகி தற்கொலை வரை நிகழ்ந்துள்ளதை நாம் யாவரும் அறிந்ததே. இணையத் தளத்தினை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் சில சமயம் மாணவர்கள் தவறான வழிகளில் செல்லும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

எது எவ்வாறாக இருப்பினும் ஒரு தொழிநுட்பம் என்றால் அதில் நன்மை, தீமை என்ற இரு பக்கங்களும் இருக்கவே செய்கின்றன. எனவே "பாலில் கலந்துள்ள நீரை விடுத்து பாலை மட்டும் குடிக்கும் அன்னப்பறவை" போல அதனை பயன்படுத்தும் மாணவர்கள் சரியான முறையில் பாவித்து அதில் இருந்து





நல்ல பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதற்கிணங்க கல்வி முறையில் பல புதுமைகளைத் புகுத்தி நம் தலைமுறையினருக்கும் பயனுள்ள வகையில் கற்றல் நிகழ்வுகளை அளித்திட வேண்டும்.

எனவே இணையவழிக் கல்வி எல்லா வசதிகளோடு இருந்த இடத்தில் இருந்தவாறு கல்வி கற்கவும் மாணவர்களின் கற்றல் திறனையும் அறிவுத் திறனையும் வளர்த்தெடுக்கவும் உதவுகின்றது. கல்வி வளமே நாட்டின் மிகச்சிறந்த மனிதவளம் ஆகும். இன்றைய சூழலில் இணையவழிக் கல்வி மிகமிகத் தேவையாகின்றது. ஆதலால் இணையவழிக் கல்வியை நேரடி வகுப்பறைக் கல்விக்கு இணையாகக் கொள்ளாவிட்டாலும் தற்காலிக தீர்வாகக் கொள்ளலாம். பொதுமுடக்க காலத்தில் எளிமையாக கல்வி கற்றிட ஏற்றவழி ஒரேவழி இணையவழி தான். எனவே இணையவழிக் கல்வி இன்றைய சூழலில் மிகத்தேவை. அதுவே காலத்தின் கட்டாயமாகும்.

# அளவெட்டியிலும் ஹாவாயிலும் ஒரே நேரத்தில் கும்பாபிடேகம்



யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவ யோகசுவாமிகளின் சீடரும் அமெரிக்க ஹாவாய் ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகளுக்கு 1975ம் ஆண்டு சிவபெருமான் ஓர் அகக் காட்சி அருளினார். இந்த அகக் காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஓர் சுயம்பு லிங்கத்தை கண்டார். இச் சுயம்பு லிங்கத்தை மையமாக கொண்டு முற்றிலும் கருங்கற்களினால் ஓர் சிவாலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த சிவாலயத்துக்கு "இறைவன் கோயில்" என குருதேவர் பெயரிட்டுள்ளார்.

இறைவன் கோயில் நுழைவாயிலில் ஓர் உருத்திராட்ச மரச்சோலை, இச்சோலையில் இருந்து கோயிலுக்கு இருமருங்கிலும் கொண்றை மரங்களை உடைய ஒரு நீண்ட நேரிய பாதை, இதை குருதேவர் "சன்மார்க்கம்" என அழைத்தார். இப்பாதையில் ஓர்







ஆலமர நிழலில் விநாயக பெருமான் எழுந்தருளியுள்ளார். அவரிடம் விடை பெற்றுச் செல்லும் போது வழியில் ஓர் குன்றின் மேல் முருகப் பெருமான் வேல் வடிவில் தரிசனம் தருகிறார். அவரையும் தரிசித்து நேரே சென்றால் சுயம்பு லிங்க பெருமானை நாம் அடையலாம்.

108 வில்வ மரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் சுயம்பு லிங்க பெருமானுக்கு 1975ம் ஆண்டு முதல் நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஒரு தசாப்தத்துக்கு மேலாக சுயம்பு லிங்க பெருமானுக்கு நித்திய பூசை செய்யும் பாக்கியம் ஆன்மீகச்சுடர். ரிஷி. தொண்டுநாத சுவாமிகளுக்கு கிடைத்தது.

சுயம்பு லிங்க பெருமானுக்கு இடது புறத்தில் இறைவன் கோயில் அமைந்துள்ளது. முழுக்கோயிலும் இந்தியாவில் கருங்கல்லில் செதுக்கப்பட்டு கப்பல்களில் அமெரிக்காவுக்கு கொண்டு வரப்பட்டு கட்டப்பட்டுள்ளது. இப் பாரிய திருப்பணியை நிறைவேற்ற 33 வருடங்கள் எடுத்தன.

இறைவன் கோயிலில் ஆறு கோணங்களையுடைய, 1540 கிலோ எடையுள்ள, உலகின் மிகப்பெரிய ஸ்படிக லிங்கம் மார்ச் 26ம் திகதி (அமெரிக்க நேரப்படி) காலை 10.19 மணிக்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அதே முகூர்த்தத்தில் குருதேவரால் 1972ம் ஆண்டு அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பசுபதீஸ்வரர் திருக்கோவில் புதிதாக அமைக்கப்பட்டு பங்குனி 13ஆம் நாள் மார்ச் 27 (இலங்கை நேரப்படி) காலை 9.40 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

யோகசுவாமிகளின் அருளணைப்படி ஈழத்திலிருந்து மேலைத் தேசத்துக்கு சைவ சமயத்தை எடுத்துச் சென்று ஆகம விதிப்படி கருங்கற்களினால் சிவாலயம் அமைத்த குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள் ஆசியாலும் ஆன்மீகச்சுடர். ரிஷி. தொண்டுநாத சுவாமிகளின் பெரு முயற்சியாலும் இத்திருப்பணிகள் நடைபெற்றன.



ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

2

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

### ஆய்வின் முக்கியத்துவமும் தர்க்கரீதியான நியாயப்பாடும்

Covid- 19 நோய் தொற்று இன்று உலகளாவிய சுகாதார பிரச்சினையாக மாறியுள்ளதுடன் கல்வியில் பெருமளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைக் காணலாம். இதனால் இன்று உலகளவில் மாணவர்களின் கல்வி என்பது கேள்விக்குறியாகக் காணப்படுவதுடன் ஆரம்பத்தில் மாணவர்களுக்கு இணையத்தளங்களின் ஊடாக கல்வி வழங்கப்பட்டு தற்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையிலே குறித்த ஆய்வு பிரதேசத்தினை பொறுத்த வரையில் கொரோனா தொற்று என்பது சமூகப் பரவலாக காணப்படுகின்றது. அதே வேளை பாடசாலைகளும் மீளத் திறக்கப்பட்டுள்ளன. இவ் நிலையில் கொரோனா வைரஸ் குறித்த தெளிவு, எவ்வாறு பரவலடைகின்றது, அதில் இருந்து எம்மையும் பிறரையும் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்த வகுப்பறை நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளை நிறுவுவது அவசியமாகின்றது. மாணவர்கள் விதிகளை பின்பற்ற வேண்டும். எனில் கொரோனா குறித்த மாணவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை கேட்டு அவர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்குவதன் ஊடாக கொரோனா குறித்த மாணவர்களின் உளப்பாங்கு, நடத்தை என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.



மீளவும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உலகளவில் பெரும் சுகாதார சவாலாக மாறியுள்ள கொரோனா குறித்த ஆய்வு பிரதேசத்திலும் அதிகளவில் பரவுவதை தவிர்க்க மாணவர்களிடம் கொரோனா குறித்த மாணவர்களின் அறிகுறிகள், நடத்தை, உளப்பாங்கு என்பன மதிப்பீடு செய்யப்படுவது அவசியமான ஒன்றாகும்.

மேலும் வவுனியா வடக்கு ஓமந்தை கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் அதிகமானவர்கள் கிராமப்புறங்களில் இருந்து வருவதனால் கொரோனா குறித்த விளக்கத்தினைக் கொண்டிருப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. கிராமப்புறங்களை பொறுத்த வரையில் அதிகளவான மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் விவசாய நடவடிக்கைகளின் போது அவர்கள் எந்தவிதமான சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றுவது இல்லை. மேலும் உள்ளூர் பகுதிகளில் கொரோனாவின் தாக்கம் குறைவாகக் காணப்படுவதனால் மக்களிடம் கொரோனா குறித்த ஓர் கவனயீனம் ஏற்படுத்தப்படுகின்றது.



இதன் காரணமாக அதிகளவு மாணவர்களின் கொரோனா குறித்த அறிவுஇ நடத்தை, உளப்பாங்கு என்பன வேறுபடுகின்றது. கொரோனா வைரஸ் சமூகபரவலாக காணப்படுவதனால் அது குறித்த தெளிவான விளக்கத்தையும் அதற்கேற்ற நடத்தை, உளப்பாங்கு கொண்டவர்களாகவும் மாணவர்கள் காணப்படவேண்டியது அவசியமாகும். அதன்படி இவ் ஆய்வு குறித்த ஆய்வு பிரதேசத்தை பொறுத்த வரையில் அவசியமான ஒன்றாகும்.

மேலும் இவ்விடயம் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் முன்னர் செய்யப்படவில்லை. எனவே அது குறித்த விழிப்புணர்வும் மாணவர்களிடம் போதியளவு காணப்படவில்லை. அத்துடன் இன்றைய கால கட்டத்தில் வவுனியா பிரதேசத்தை பொறுத்த வரையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்கின்ற நிலையில் மாணவர்களிடம் கொரோனா வைரஸ் குறித்த புரிதலை மதிப்பிடுவது என்பது அவசியமாகின்றது. அத்துடன் கொரோனா வைரஸ் பாடசாலை மட்டத்தில் தீவிரமாக பரவுவதை குறைக்கவும் இனிவரும் காலங்களில் கொரோனா குறித்த புரிதலை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற நோக்கில் இவ் ஆய்வு குறித்த ஆய்வுப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

*ஆராய்வோம்...*



எஸ்.எஸ்.நுஜன்

# ஐபிஎல் 2023க்கான புதிய விதிகள்

உலகம் முழுவதும் கிரிக்கெட் போட்டிகள் எம்சிசி விதிகளுக்கு அமைய நடைபெறுவது வழமை. இருப்பினும் அவற்றிற்கு மேலதிகமாக சில விதிகள் உள்வாங்கப்படுவதும் உண்டு. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரேலியாவின் பிக்பாஸ் தொடரில் மூன்று புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது இருப்பினும் கடந்த ஆண்டுக்கான தொடரில் அதில் ஒரு விதி கைவிடப்பட்டது. அதே போல் இம்முறை நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டிகளிற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் சில புதிய விதிகள் அறிமுகப்படுத்தியுள்ளது.

முன்னதாக விளையாடும் பதினொருவர் அணியின் விபரம் நாணய சுழற்சியின் போது அணித் தலைவர்கள் தமக்கிடையே அணி விபரங்களை பகிர வேண்டும். ஆனால் இப்போது அணித்தலைவர் நாணய சுழற்சியின் பின்னர் தனது அணியில் மாற்றம் செய்யமுடியும். அத்துடன் அறிவிக்கப்படும் அணியில் விளையாடும் பதினொருவர் உட்பட மேலதிகமாக ஐந்து வீரர்கள் என 16 பேர் கொண்ட அணி அறிவிக்கப்படும். அதாவது ஒரு அணி இரு 16 பேர் கொண்ட அணியினை தெரிவு செய்யும், பின்னர் நாணய சுழற்சியின் பின்னர் அவர்கள் முதலில் துடுப்பாடப் போகிறார்களா? இல்லை, பந்துவீசப்போகிறார்களா? என்பதை பொறுத்து இரண்டில் ஒரு அணியை அறிவிக்க முடியும். இதன் மூலம் நாணய சுழற்சியால் ஏற்படும் பாதிப்பை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும். இதே போன்ற விதி தென்னாப்பிரிக்கா ரி20



லீக்கில் பயன்படுத்தப்பட்டு போட்டி முடிவில் நாணய சுழற்சியின் தாக்கம் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் அங்கு 13 வீரர்கள் அறிவிக்கப்பட்டு நாணய சுழற்சியின் பின் பதினொருவர் அணி அறிவிக்கப்பட்டது.

அடுத்த விதியானது ஏற்கனவே பிக்பாஸ் தொடரில் பயன்படுத்தப்படுகிற விதியாகும்: தாக்கம் செலுத்தும் வீரர் (Impact Player) விதி. அதாவது மேலதிகமாக அறிவிக்கப்பட்ட நான்கு வீரர்களில் ஒரு வீரர் இனை பதினொருவர் அணியில் சேர்க்க முடியும். அணித்தலைவர், ஆட்டம் ஆரம்பிக்க முன்னதாகவோ, ஒரு பந்து பரிமாற்றத்தின் பின்னரோ மற்றும் ஒரு வீரர் ஆட்டமிழந்ததன் பின்னரோ மாற்றம் செய்யமுடியும். உதாரணமாக ஒரு துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்தால்/ ஓய்வுபெற்றால், அந்த வீரரை இன்னோர் துடுப்பாட்ட வீரரால் மாற்றம் செய்யலாம். அந்த வீரர் துடுப்பாட முடியும் ஆனால் முதலில் தேர்வு செய்யப்பட்ட ஒரு பந்து வீச்சாளர் துடுப்பாடமாட்டார் இதுவே ஒரு பந்துவீச்சாளர் பந்து வீசியதன் பின் மாற்றப்பட்டால் புதிதாக உள்ளே வருபவர் முழுமையாக நான்கு பந்து பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் தாக்கம் செலுத்தும் வீரர்களாக இந்திய வீரர்கள் மட்டுமே இருக்க முடியும் நான்கு வெளிநாட்டு வீரர்கள் பதினொருவர் அணியில் இடம்பெறவிடின் மட்டுமே தாக்கம் செலுத்தும் வீரர்களாக வெளிநாட்டு வீரர்கள் இருக்கமுடியும். மேலும் இந்த விதியை போட்டியின் எந்த நேரத்திலும் பயன்படுத்த முடியும்.

இவற்றை விட மேலும் சில விதிகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

* நோ-போல் மற்றும் வைட்-போல் என்பவற்றுக்கும் மேன்முறையீடு செய்ய முடியும்.





* ஏற்றுக்கொள்ள முடியாத விதமாக களத்தடுப்பாளர் அசைந்தால் உதிரி ஐந்து ஓட்டங்கள் உடன் அந்த பந்துவீச்சு நிராகரிக்கப்படும்.

* குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசி முடிக்காவிடின் நான்கு வீரர்களே 30-யார் வட்டத்திற்கு வெளியே நிற்க முடியும்.

தாக்கம் செலுத்தும் வீரர் விதி தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னாள் ஆஸி அணித் தலைவரும் டெல்லி அணியின் தலைமை பயிற்சியாளரும் ஆன ரிக்கி பாண்டிங், இவ் விதியால் ஏழாம் இலக்கத்தில் தேர்வு செய்யப்படுகின்ற தனியே துடுப்பாட்ட/ பந்துவீச்சு வீரராக பிரகாசிக்க முடியாத சகலதுறை வீரர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றார். ஏனெனில் போட்டியின் தன்மையை பொறுத்து பதினொருவர் அணியில் மாற்றம் செய்ய முடியும்.

இவ் மாற்றங்களின் செயற்பாட்டையும் இவற்றை எவ்வாறு அணிகள் பயன்படுத்தப் போகின்றன என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## சாக்லேட் கார்

சாக்லேட்டை கொண்டு சமையல் கலைஞர் ஒருவர் மினி காரை உருவாக்கியுள்ளார். அம்ரி குய்ச்சோன் எனும் சமையற்கலைஞர் சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமானவர். குறிப்பாக பேக்கரி உணவுகளை செய்வதில் வல்லவர். தற்போது சாக்லேட்டை கொண்டு மினி காரை வடிவமைத்துள்ளார். காரின் பாகங்களை சாக்லேட்டில் வரைந்து அதை கட் செய்து காரை அப்படியே வடிவமைத்துள்ளார். பிறகு அதன் மீது வெள்ளை நிறத்தில் பெயிண்ட் அடித்துள்ளார். பார்ப்பதற்கு அப்படியே கார் போன்றே உள்ளது. இந்த வீடியோவுக்கு கீழ் ஹூண்டாய் நிறுவனம் கமெண்ட் பதிவிட்டுள்ளது. அந்த கமெண்டில், “இது ஒரு இனிமையான சவாரி” என்று குறிப்பிட்டுள்ளது.

